<u>**பயிற்சிகள்.**</u>

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **89** இல் காணப்படும் பெயரெச்சத்தின் பின் வலிமிகாது என்ற இலக்கண விதியை அறிதல். தொடர்ந்து, பக்கம் **89** இல் காணப்படும் **(**இடுபணி **1)** பெயரெச்சங்களை அடையாளம் கண்டு எழுதவும். மேலும், பக்கம் **90** இல் காணப்படும் இடுபணி **3** செய்யவும். உங்கள் விடைகளை எழுதி தொலைவரியில் அனுப்பவும். இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) ஞாயிறு இரவு **7** மணியளவில் அல்லது திங்கள் இரவு **8** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

பாடம் ◦ 4 **இலக்கணம்**

### பெயரெச்சம்

- சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.

**பெயரெச்சத்தின் பின் வலிமிகாது**

பார்த்த + படம்

முற்றுப் பெறாதது - எச்சம் | பெயர்ச்சொல்

பார்த்த படம்

எ.கா:

| | | | | |
|---|---|---|---|---|
| பறந்த | + | பறவை | = | பறந்த பறவை |
| ஆடுகின்ற | + | பெண் | = | ஆடுகின்ற பெண் |

**இடுபணி 1**

பெயரெச்சங்களை அடையாளங்கண்டு கூறுக.

| | | | |
|---|---|---|---|
| வாடிய பயிர் | ஓடிய பையன் | பிடித்துக் கொடு | குடித்த தேநீர் |
| தேடிய குருவி | கடித்துத் தின்றான் | எழுதிய கதை | எடுத்துச் சொல் |
| கூடிப் பேசினர் | படித்த புத்தகம் | ஆடிப் பாடு | |

**இடுபணி 2**

அடையாளங்காணப்பட்ட பெயரெச்சங்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.

| | |
|---|---|
| எ.கா: வாடிய பயிர் | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

5.5.10 பெயரெச்சத்தின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

தொகுதி 9

**இடுபணி 3**

அட்டவணையில் உள்ள சொற்களுக்கு ஏற்ற சொற்களை எழுதிப் பெயரெச்சங்களை உருவாக்குக.

| | |
|---|---|
| கேட்ட | |
| அடித்த | |
| துடித்த | |
| விளைகின்ற | |
| | தலைவன் |
| | குதிரை |
| | பாடல் |
| | பயிர் |

**வளப்படுத்துதல்**

பெயரெச்சத்தின்பின் வலிமிகாது என்ற விதிகளுக்கேற்ற எடுத்துக்காட்டுகள் பத்தினை எழுதுக.

**குறைநீக்கல்**

உரைநடைப் பகுதியில் பெயரெச்சத்தின்பின் வலிமிகாது என்ற விதி கொண்ட சொற்றொடர்களை அடையாளங்கண்டு எழுதுக.

இன்று துரிதமாக வளர்ந்து வருகின்ற விவசாயத் துறையில் பயிர்கள் மட்டுமல்ல கால்நடை வளர்ப்பும் அடங்குகிறது. கால்நடை வளர்ப்பில், குறிப்பாகப் பால் உற்பத்தித் துறையில் எருமைப் பால் மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. காரணம் விலை மலிவு. தாவரங்கள் பயிரிடுவது விவசாயிகளின் உன்னத செயலாகும். பயிர்கள் வளர்ந்து அறுவடைக்குத் தயாராகவில்லையென்றால் விவசாயிகள் உழைத்த பாடு யாவும் கேள்விக் குறியே. அவர்களின் கடின உழைப்பிற்கு உரிய செல்வம் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. விவசாயத் துறை பல்வேறு சவால்களை எதிர்கொண்டாலும் விவசாயிகள் கொள்கையில் என்றும் மாறாமல் உலகத்தார் போற்றும் இனமாகவே வாழ்ந்து வருகின்றனர்.